**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 47/2023 |
| Name | : Rama |
| P.W. | : 1 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 10.10.2025

**எதிரிகள் 1 முதல் 3 நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் நாமக்கல் மாவட்டம் கூடச்சேரியில் வசிக்கிறேன். விவசாயம் செய்து வருகிறேன். எனது அண்ணன் வீடு சர்க்கார் கண்ணாடிப்புத்தூரில் உள்ளது. ஆஜர் எதிரிகளை தெரியும். 2023 ம் வருடம் மே 1 ம் தேதி மாரியம்மன் கோவில் திருவிழாவிற்காக கண்ணாடிப்புத்தூரில் உள்ள எனது அம்மா வீட்டிற்கு வந்தோம். எங்களுக்கும், எதிரிகளுக்கும் ஏற்கனவே தடம் சம்மந்தமாக பிரச்சனை இருந்தது. 07.05.2023 ம் தேதி இரவு 10.00 மணி அளவில் நாங்கள் எங்கள் வீட்டின் முன்பு உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தோம். அப்போது எதிரிகள் தடத்தில் மாட்டை கட்டினார்கள் அதற்கு எனது அண்ணன் வண்டி கூட வர முடியாது என்று எங்களிடம் பேசிக்கொண்டிருந்தார் அப்போது அங்கு வந்த கமலகண்ணன் மனைவி கௌசல்யா எங்களைப் பார்த்து தகாத வார்த்தையால் திட்டினார் நானும், எனது அண்ணனும் அதை கேட்ட போது கமலக்கண்ணனும், சதீசும் அங்கு என்ன நடந்தது என்றே தெரியாமல் வேகமாக வந்து எனது தலை முடியை பிடித்து காதோரமாக என்னை அடித்தார்கள். நைட்டியை பிடித்து இழுத்தார்கள். எனது அம்மா வந்து தடுத்த பின்பு தான் விட்டார்கள். பின்பு வலி அதிகமாக

இருந்ததால் மடத்துக்குளம் அரசு மருத்துவமனைக்கு வந்தோம் அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக உடுமலை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். நான் மருத்துவமனையில் இருந்த போது மறு நாள் போலீசார் வந்த போது நான் அவர்களிடம் புகார் மனு கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **அந்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

(1) எங்களுக்கும், எதிரிகளுக்கும் எப்போது இருந்து பேச்சுவார்த்தை இல்லை என்றால் எனது அண்ணன் வீடுஅங்கு கட்டிய போது இருந்தே பிரச்சனை இருந்தது. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் வள்ளிநாயகம் இருந்தார் என்றால் சரிதான். கமலகண்ணன் மற்றும் சதீஷ்குமார் எனது சொந்த தாய் மாமன் மகன்கள் என்றால் சரிதான். எங்களுக்கும், எதிரிகளுக்கும் வண்டி நிறுத்துவது சம்மந்தமாக பிரச்சனை இருந்தது என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் சமயத்தில் வண்டி நிறுத்துவது சம்மந்தமாக எனது அண்ணன் எதிரிகளை சத்தம் போட்டார் என்றால் சரியல்ல எனது அண்ணன் எங்களிடம் பேசிக்கொண்டிருந்தார். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் சமயத்தில் எனது அண்ணன் மற்றும் அவரின் மனைவி இருவரும் சேர்ந்து வள்ளிநாயகத்தை தள்ளிவிட்டு காயம் ஏற்பட்டு அதற்கு அவர் சிகிச்சை பெற்றார் என்றால் சரியல்ல. வள்ளிநாயகம் எனது அத்தை. வள்ளிநாயகம் கொடுத்த புகாரின் பேரில் எனது அண்ணன் மற்றும் அண்ணி மீது குற்ற எண்.70/2023 வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் எங்கள் வீடு என்றால் சரியல்ல எங்கள் வீட்டிற்கும், எதிரிகள் வீட்டிற்கும் இடையே உள்ள இடம்.

(2) மருத்துவமனைக்கு இரவு 11.00 மணிக்கு சென்றேன். எங்கள் ஊரில் இருந்து மடத்துக்குளம் அரசு மருத்துவமனைக்கு 10 நிமிடத்தில் வந்துவிடலாம் என்றால் சரிதான். போலீசார் காலை 07.00 மணிக்கு மருத்துவமனைக்கு வந்தார்கள். சம்பவம் சம்மந்தமாக விசாரித்தார்கள் என்றால் சரிதான். புகாரில் கௌசல்யா என்பவர் எங்கள் வீட்டிற்குள் உட்கார்ந்திருந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். கௌசல்யா எத்தனை மணிக்கு

வந்தார் என்றால் 10.00 மணிக்கு வந்தார். அந்த சமயத்தில் ஊர் திருவிழா நடந்து கொண்டிருந்தது. மைக்செட் போட்டு சத்தமாக இருந்தது என்றால் சரியல்ல இரவு நேரம் என்பதால் அணைத்துவிட்டார்கள். மடத்துக்குளம் அரசு மருத்துவமனையில் இருந்து உடுமலை அரசு மருத்துவமனைக்கு மதியம் சென்றோம். மடத்துக்குளம் அரசு மருத்துவமனையில் இருந்து நானாக வெளியேறினேன் என்றால் சரியல்ல அவர்கள் என்னை உடுமலை அரசு மருத்துவமனைக்கு செல்ல அறிவுறுத்தினார்கள்.

(3) புகாரை யார் எழுதியது என்றால் எனது அண்ணன் எழுதினார் எனக்கு எழுத வரவில்லை. காலதாமதமாக புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. சங்கிலியப்பன், ஆறுமுகம் ஆகியோர் சம்பவம் நடந்த பின்பு தான் அங்கு வந்தார்கள் என்றால் சரிதான். உடுமலை அரசு மருத்துவமனையில் அன்று மாலையே என்னை டிஸ்சார்ஜ் செய்து விட்டார்கள். எனது அண்ணன் மது அருந்திவிட்டு எதிரிகளிடம் பிரச்சனை செய்தார் என்றால் சரியல்ல. எதிரிகள் குடும்பத்திற்கும், எனது அண்ணன் குடும்பத்திற்கும் இருந்த முன் விரோதம் காரணமாக எனது அண்ணன் சொல்லி பொய்யாக புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. எதிரிகளால் எனக்கு காயம் ஏற்படவில்லை என்றால் காயம் ஏற்பட்டதாக நான் சொல்லவில்லை எனது இடது காதில் வலி ஏற்பட்டது ஜவ்வில் அடிப்பட்டதாக மருத்துவர் சொன்னார். எதிரிகள் என்னை தகாத வார்த்தையால் பேசவில்லை என்றால் சரியல்ல பேசியதால் தான் சண்டையே வந்தது. எதிரிகள் 1 மற்றும் 2 அவர்களின் தாயாரை தாக்கி காயப்படுத்திய வழக்கில் இருந்து தப்பிப்பதற்காக பொய்யாக புகார் கொடுத்தோம் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

DHEENADHAYALAN M
Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2025.10.10 16:45:35 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 47/2023 |
| Name | : Durkaraja |
| P.W. | : 2 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 10.10.2025

**எதிரிகள் 1 முதல் 3 நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் கண்ணாடிப்புத்தூரில் வசித்து வருகிறேன். தனியார் நிறுவனத்தில் வேலை செய்கிறேன். அ.சா.1 எனது தங்கை. ஆஜர் எதிரிகளை தெரியும் எனது தாய் மாமா மகன்கள் மற்றும் அவரின் மனைவி. ஆஜர் எதிரிகளுக்கும், எங்களுக்கும் தடப் பிரச்சனை இருந்தது. 07.05.2023 ம் தேதி இரவு 10.00 மணி அளவில் சர்க்கார் கண்ணாடிப்புத்தூரில் உள்ள எனது வீட்டில் நான், எனது மனைவி, அம்மா மற்றும் எனது தங்கை எதிரிகள் போகவர தடம் விடாமல் செய்து கொண்டிருப்பதாக பேசிக்கொண்டிருந்தபோது கமலக்கண்ணன் மனைவி கௌசல்யா என்னை தாயோழி, கேனப்புண்ட என்று என்னை கெட்ட வார்த்தையால் திட்டினார் எனது தங்கை ஏன் கெட்ட வார்த்தையால் பேசுகிறீர்கள் என்று கேட்டார். பேசிக்கொண்டிருந்த போது அங்கு வந்த கமலக்கண்ணன் மற்றும் அவரது சகோதரர் சதீஷ் குமார் வந்து எனது தங்கையை கையால் காதிலும், முதுகிலும் அடித்தார்கள். அருகில் உள்ளவர்கள் வந்த உடன் எதிரிகள் சென்றுவிட்டார்கள். எனது தங்கையை மடத்துக்குளம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து வந்தோம் அங்கு சிகிச்சைக்கு சேர்ந்தோம் உடுமலை அரசு மருத்துவமனைக்கு மறு நாள் மதியம் அனுப்பி

வைத்தார்கள். அங்கு சிகிச்சை அளித்து மாலையில் டிஸ்சார்ஜ் செய்தார்கள். புகார் மனுவை எனது தங்கை கொடுத்தார். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

(1) நாங்கள் பேசிக்கொண்டிருந்ததாக சொன்ன சமயத்தில் யாரிடம் பேசினோம் என்றால் எங்களுக்குள்ளே பேசிக்கொண்டிருந்தோம். நான் அந்த சமயத்தில் மது அருந்தியிருந்தேன் என்றால் சரியல்ல. நான் மது அருந்திவிட்டு எதிரிகளை அசிங்கமாக பேசியதால் தான் பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரியல்ல. எனது அத்தை வள்ளிநாயகத்தை நானும், எனது மனைவியும் பேசி அடித்து காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. எனது அத்தை வள்ளிநாயகம் உடுமலை அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார் என்றால் அதைப் பற்றி தெரியாது. என் மீதும், எனது மனைவி மீதும் வள்ளிநாயகத்தை அடித்ததாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் அதைப் பற்றி தெரியாது. நீதிமன்றத்தில் மூலமாக பிணை பெற்றோமா என்றால் இல்லை.

(2) புகாரை எழுதியபோது யார் இருந்தோம் என்றால் நான், எனது மனைவி, அம்மா, தங்கை ஆகியோர் இருந்தோம். புகாரை எத்தனை மணிக்கு எழுதினோம் 08 ம் தேதி இரவு 07.00 மணி அளவில் எழுதினோம். எதிரிகளுக்கும், எங்களுக்கும் தடப் பிரச்சனை சம்மந்தமாக பேச்சுவார்த்தை இல்லை என்றால் சரிதான். புகாரை நான் தான் எழுதினேன். புகாரை காலதாமதமாக கொடுத்தோம் என்றால் சரியல்ல சம்பவம் நடந்து மறு நாள் கொடுத்தோம். சம்பவம் உண்மையாக நடந்ததிருந்தார் உடனே கொடுத்திருப்போம் என்றும் பொய்யாக கொடுத்ததால் தான் காலதாமதமாக கொடுத்தோம் என்றால் சரியல்ல.

(3) போலீசார் சம்பவ இடத்திற்கு எத்தனை மணிக்கு வந்தார்கள் என்றால் மறு நாள் மாலை சுமார் 06.00–07.00 மணிக்கு வந்தார்கள். காலையில் மருத்துவமனையில் வந்து விசாரித்தார்கள். வந்த போலீசாரின் விவரம் தெரியாது. போலீசார் வந்து விசாரித்த பின்பு தான் புகார் கொடுத்தோம் என்றால் சரிதான். மடத்துக்குளம் அரசு மருத்துவமனையில் எத்தனை மணிக்கு சென்றோம் என்றால் இரவு 11.00 மணி அளவில் சென்றோம். உள்நோயாளியாக எத்தனை நாட்கள் இருந்தார்கள் என்றால் இரவு அட்மிட் செய்யப்பட்டு மறு நாள் காலை டிஸ்சார்ஜ் செய்யப்பட்டார். சங்கிலியப்பன், ஆறுமுகம் ஆகியோர் சத்தம் கேட்டு தான் வந்தார்கள் என்றால் சரிதான். 1 மற்றும் 2 எதிரிகளின் தாயாரை

காயப்படுத்தியதால் அந்த வழக்கில் இருந்து தப்பிக்க வேண்டி எனது தங்கையை வைத்து பொய்யாக இந்த புகாரை கொடுத்தோம் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

DHEENADHAYALAN M

Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2025.10.10 16:45:41 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 47/2023 |
| Name | : Easwari |
| P.W. | : 3 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 10.10.2025

**எதிரிகள் 1 முதல் 3 நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் கண்ணாடிப்புத்துாரில் வசித்து வருகிறேன். அ.சா.1 மற்றும் அ.சா.2 எனது மகள் மற்றும் மகன். ஆஜர் எதிரிகளை தெரியும். எனது அண்ணன் மகன்கள். 2023 ம் வருடம் ஞாயிற்றுக்கிழமை இரவு 10.00 மணிக்கு கண்ணாடிப்புத்துாரில் உள்ள எங்கள் வீட்டில் நான், எனது மகன், மகள் மற்றும் மருமகள் ஆகியோர் பேசிக்கொண்டிருந்தோம் அப்போது ஆஜர் எதிரிக கௌசல்யா அங்கு வந்து எனது குழந்தைகளை பார்த்து திட்டிக்கொண்டிருந்தார்கள். ஆஜர் எதிரிகள் சதீஷ் மற்றும் கமலக்கண்ணனும் கையால் எனது மகளை தலையில் அடித்தார்கள். எனது மகளுக்கு காது வலி ஏற்பட்டது. மடத்துக்குளம் மருத்துவமனைக்கு வந்து அங்கிருந்து உடுமலைப்பேட்டை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

**(1)** சம்பவம் நடந்ததாக சொல்லும் சமயத்தில் எனது மகன் சத்தம் போட்டு

பேசிக்கொண்டிருந்தார் என்றால் சரிதான். அந்த சமயத்தில் எனது மகன் மது அருந்தியிருந்தார் என்றால் அதைப் பற்றி தெரியாது. தடம் சம்மந்தமாக எனது மகன் அசிங்கமாக பேசினார் என்றால் அவர்களும் பேசினார்கள் இவர்களும் பேசினார்கள். எனது மகன் அசிங்கமாக பேசிய போது வள்ளிநாயகம் வந்து ஏன் என்று கேட்டார் என்றால் சரிதான். எனது மகனும், மருமகளும் சேர்ந்து வள்ளிநாயகத்தை அடித்து காயப்படுத்தினார்கள் என்றால் சரியல்ல. அடித்தது சம்மந்தமாக எனது மகன் மற்றும் மருமகள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுது என்றால் சரியல்ல. போலீசார் என்னை மறு நாள் சுமார் மாலை 04.00 மணிக்கு விசாரித்தார்கள். போலீசார் புகார் கொடுக்கச் சொன்னார்களா என்றால் இல்லை இருவரையும் சமாதானமாக போகச் சொன்னார்கள்.

(2) சம்பவ சமயத்தில் ஊரில் மைக் செட்டில் சத்தமாக இருந்தது என்றால் சரியல்ல. எங்களுக்கும், எதிரிகளுக்கும் தடம் சம்மந்தமாக இருந்த பிரச்சனைக்காக புகார் கொடுத்தார் என்றால் சரியல்ல என் மகளை அடித்ததற்காக புகார் கொடுத்தார். வள்ளிநாயகத்தை அடித்தது சம்மந்தமாக வழக்கில் தப்பிக்க வேண்டி பொய்யாக புகார் கொடுத்தோம் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

DHEENADHAYALAN M

Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2025.10.10 16:45:47 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்